## பவானி நகராட்சி 16.02.2024-ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

**மன்ற பொருள் :1**

பவானி நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்கள் 2024-2025 முதல் 2026-2027 முடிய மூன்றாண்டு காலத்திற்கு அனுபவம் செய்து கொள்ளும் உரிமையினை பொதுஏலத்தில் விட தயாரிக்கப்பட்ட ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்டுள்ள பொது நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் கண்டுள்ள பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

மேலும் மேற்படி ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிக்கையை கூட்டுறவு அச்சகத்தில் அச்சு செய்து கொள்ளவும் மற்றும் ஏல விளம்பர அறிக்கையை செய்தித்தாளில் விளம்பரம் செய்ய அதற்கான உத்தேச செலவினம் ரூ.200000/- (இரண்டு லட்சம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1450/2020/அ2)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** :1

மன்றம் பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் :2**

இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள IHSDP கடை எண்.32, 33, 34, 35, 38 ஆகிய ஐந்து கடைகளின் குத்தகை உரிமம் 30.11.2023 –ல் முடிவடைவதால் உரிமத்தை மேலும் இரண்டாவது மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து தரக்கோரி மனு கொடுத்துள்ளனர். அரசாணை (நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை, நாள்:03.07.2007 -ன் படி ஏற்கனவே உள்ள மாத வாடகை தொகையிலிருந்து 15% சதவீதம் உயர்வு செய்து 01.12.2023 முதல் இரண்டாவது மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கலாம். அதில் பன்னிரண்டு மாத வாடகை வித்தியாசத்

தொகையை முன் வைப்புத்தொகையாக செலுத்தப்பட்டது. கடைகளின் புதிய வாடகை விபரம் பின்வருமாறு.

| வ. எண் | கடை எண் | வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் | பழைய வாடகை | 15% உயர்வு | புதிய வாடகை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 32 | 055/87 | J.பாக்கியம் | 5175 | 776 | 5951 |
| 2 | 33 | 055/88 | M.ரவிச்சந்திரன் | 5175 | 776 | 5951 |
| 3 | 34 | 055/89 | C.செல்வம் | 5175 | 776 | 5951 |
| 4 | 35 | 055/90 | M.வசந்தா | 5175 | 776 | 5951 |
| 5 | 38 | 055/93 | M.புஷ்பா | 5175 | 776 | 5951 |

மேற்கண்ட கடைகளை புதுப்பித்து வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் பார்வையிடப்பட்டு பதிவு செய்யலாம்

**(ந.க.எண்:2331/2016/அ2)**

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 2

மன்றம் பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**மன்ற பொருள் :3**

பவானி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விபரங்களை 2023ம் ஆண்டு தொழில் மலர் 23.10.2023ஆம் தேதி காலைக்கதிர் நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான செலவினம் ரூ.5670/- "Mahalakshmi Media Pvt Ltd" நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

**நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதைமன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண். 1550/2022/இ1)**

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 3

**முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**மன்ற பொருள் :4**

பவானி நகராட்சியில் உள்ள அனைத்து பிரிவுகளிலும் பயன்பாட்டில் உள்ள மற்றும் Warranty Period முடிவுற்ற கீழ்க்காணும் எண்ணிக்கையில் உள்ள கணிப்பொறி சாதனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு AMC (Annual Maintenance Contract) முறையில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்து நல்ல முறையில் வழங்க தகுதியான நிறுவனத்தின் மூலம் இப்பணியினை மேற்கொள்ளவும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம்)த்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No. | Item | Nos |
|---|---|---|
| 1 | Desktops | 14 |
| 2 | Laser Printers | 7 |
| 3 | Xerox Machine | 1 |
| 4 | Entire Office Net Working | |

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம், இதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1725/2023/இ1)

<u>மன்றத்தீர்மானஎண்</u> : 4

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

மன்ற பொருள் :5

பவானி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விபரங்களை 2023ம் ஆண்டு தொழில் மலர் 23.10.2023 ஆம் தேதி தினத்தந்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான செலவினம் ரூ.20000/- "The Daily Thanthi" நிறுவனத்திற்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதைமன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1492/2022/இ1)

<u>மன்றத்தீர்மானஎண்</u> : 5

முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கப்பட்டது.

மன்ற பொருள் :6

பவானிநகராட்சியில்பணிபுரிந்துவயதுமுதிர்வுகாரணமாகபணிஓய்வுபெற்ற மற்றும் ஓய்வு பெறவுள்ளசிறப்புசேமநலநிதி (SPF) திட்டத்தில்உள்ளபணியாளர்களுக்குநகராட்சிவழங்கவேண்டியசிறப்புசேமநலநிதி (SPF)அரசுபங்களிப்புதொகைரூ.10,000/- வீதம்வழங்குவதற்குஅதற்கானசெலவினத்தைநகராட்சிபொதுநிதியில்இருந்து மேற்கொள்ளவும்மன்றத்தின்அனுமதிகோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு :

மன்றம்அனுமதிவழங்கலாம்.(ந.க.எண்.042/2024/எச்1)

<u>மன்றத்தீர்மானஎண்</u> : 6

செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

மன்ற பொருள் :7

தென்மாவட்டங்களில்வெள்ளத்தால்பாதித்ததூத்துக்குடிமாநகராட்சிபகுதிகளில்வெள்ளநிவாரணபணிகள்மேற்கொள்ளநகராட்சிநிர்வாகமண்டலஇயக்குநர், திருப்பூர்ந.க.எண்.1537/2022/பி1, நாள்.19.12.2023- கடிதத்தின்படிஇந்நகராட்சியில்இருந்து 15தூய்மைபணியாளர்கள்மற்றும்ஒருதுப்புரவுபணிமேற்பார்வையாளர்கள்ஆகியோர்இப்பணியினைமேற்கொள்ளதெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணிக்காகமேற்படிகுழுதூத்துக்குடிமாநகராட்சிக்குசெல்லவும்இப்பணியாளர்களின்உணவு, போக்குவரத்து, தங்குமிடம்தளவாடசாமான்கள்மற்றும்அனைத்துஅத்தியாவசியபணிகளுக்காக

ஏற்படும்உத்தேசசெலவினம்ஒருஇலட்சத்திற்கு (ரூ.1,00,000/-) நகராட்சிபொதுநிதியில்இருந்துவழங்குவதற்கும்மன்றத்தின்அனுமதிகோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

நகர்மன்றதலைவர்அவர்களின்முன்அனுமதிபெற்றுமேற்படிபணியின்அவசரஅவசியம்கருதிமேற்கொள்ளரூ.1,00,000/-
செலவினத்தைபொதுநிதியில்மேற்கொள்ளமன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1864/2023/எச்1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 7

செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் :8**

இந்நகராட்சிக்கு சொந்தமான மேட்டூர் மெயின் ரோடு ஆணையாளர் குடியிருப்பு அருகில் அமைந்துள்ள நீர் தேக்க தொட்டி வளாகம் முன்புறத்தில் உள்ள கடை எண்.01, 02, 03, மற்றும் 04 ஆகிய கடைகளுக்கு 9 ஆண்டு குத்தகை காலம் முடிவடைவதால் மேற்படி கடைகளுக்கு அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007 –ன் மறுமதிப்பீடு செய்து குத்தகை நீட்டிப்பு வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களை தலைவராக கொண்ட கண்காணிப்பு குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில், அங்காடி மதிப்பின்படி மேற்கண்ட 4 கடைகளுக்கும் கீழ்கண்டவாறு வாடகை உயர்வு செய்து மறுமதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

| கடை எண். | வரிவிதிப்பு எண். | அளவு | தற்போதைய வாடகை ரூ. | மறுமதிப்பீடு செய்த வாடகை ரூ. | வைப்புத் தொகை 12 மாதம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 055/79021 | 170 | 1587 | 9020 | 89196 |
| 2 | 055/79022 | 170 | 1620 | 9020 | 88800 |
| 3 | 055/79023 | 170 | 1654 | 9020 | 88392 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 055/79024 | 170 | 1654 | 9020 | 88392 |

மேற்கண்ட வாடகை மறுமதிப்பீடு தொகை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு :**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்(**ந.க.எண்**712/2017/அ2)

**மன்றத்தீர்மானஎண்** : 8

மன்றம் பார்வையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

**மன்ற பொருள் :9**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண் 17380/2022/எஸ்.பி.எம் நாள் 21.6.2023-ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அலுவலகத்தில் 14420 மையம் அமைக்கப்பட வேண்டும். என தெரிவிக்கப்பட்டதின் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருப்பூர் அவர்களின் ந.க.எண் 2452/2023/B1, நாள்:21.6.2023 கடிதத்தில் மேற்படி மையம் ரூ.5,00,000/- கோபி செட்டிபாளையம் நகராட்சி மூலம் செய்து முடிக்கப்பட்டது. அதற்கான பங்குதொகை ரூ1,25,000/-ஐ சம்மந்தப்பட்ட நகராட்சிக்கு வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பங்கு தொகை ரூ1,25,000/-வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதி வழங்கலாம். (**ந.க.எண்**:061/2024/எச்1)

**மன்றத்தீர்மானஎண்** : 9

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 10**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 வர்ணபுரம் 5வது வீதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பொது உபயோகத்திற்கு போதிய தண்ணீர் வசதி இல்லை. பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். மேற்படி வீதியில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசைப்பம்புகள் அமைத்து HDPE டேங்க் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே மேற்கண்ட HDPE டேங்கிலிருந்து 4 குழாய்கள் அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீடு

ரூ.70,000/- தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 191/2024/இ1)**

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** <u>: 10</u>

**மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**மன்ற பொருள் : 11**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 முதல் 27 வரையுள்ள வார்டுகளில் பொதுக்கழிப்பிடங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி பொதுக்கழிபிடங்களில் உள்ள கதவுகள், பேசின்கள், தரைதளங்கள், டைல்ஸ் மற்றும் தண்ணீர் வசதிகள் ஆகியன பழுது ஏற்பட்டுள்ளதாக புகார்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ளனர். எனவே மேற்கண்ட கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4.65 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.**(ந.க.எண். 192/2024/இ1)**

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** <u>: 11</u>

மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 12**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 14 வரையுள்ள வார்டுகளில் பொதுக்கழிப்பிடங்கள் இயங்கி வருகின்றன. மேற்படி

பொதுக்கழிபிடங்களில் உள்ள கதவுகள், பேசின்கள், தரைதளங்கள், டைல்ஸ் மற்றும் தண்ணீர் வசதிகள் ஆகியன பழுது ஏற்பட்டுள்ளதாக புகார்கள் நகர்மன்ற உறுப்பினர்கள் அளித்துள்ளனர். எனவே மேற்கண்ட கழிப்பிடங்களில் பராமரிப்பு மேற்கொள்ள மதிப்பீடு ரூ.4.90 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.192/2024/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 12

மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 13**

பவானி நகராட்சியில் AMRUT 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர்திட்டஅபிவிருத்திபணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதிகளில் குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் நீருந்து குழாய்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. அவ்வாறு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் அமைக்கும் பொழுது ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புகளில் உடைப்பு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிப்பு அடைகிறது. அவ்வாறு ஏற்படும் உடைப்புகளை உடனுக்குடன் சரிசெய்யும் பொருட்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி உத்தேச செலவினம் ரூ.9.90 இலட்சம் மதிப்பிடப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1453/2024/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 13

மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 14**

பவானி நகராட்சிக்கு சொந்தமான 9 ஆண்டு மற்றும் 3 ஆண்டு குத்தகை இனங்கள் 11.11.2023 –ல் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன்படி 06.12.2023 ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகை இனம் | பொது ஏலத்தில் கோரப்பட்ட நபர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலத் தொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்ட விபரம் |
|---|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலைய கடை எண்.39 | M.அண்ணாதுரை த/பெ M.முருகேசன் , 6/53, வர்ணபுரம் 5வது வீதி,பவானி. ஏலத் தொகை ரூ.6150/- | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. |
| 2 | | D.சிவா த/பெ தனபால், 5/86, சக்தி மெயின் ரோடு, புதுகாடையாம்பட்டி. ஏலத் தொகை ரூ.6200/- | ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை. |

**அலுவலக குறிப்பு:**

புதிய பேருந்து நிலைய கடை எண்.39 –க்கு உயர்ந்தபட்ச ஏலத் தொகை கோரியுள்ள திரு.D.சிவா த/பெ தனபால் என்பவரின் மாதம் ஒன்றிற்கு வாடகை தொகை ரூ.6200/- அரசாங்க மதிப்பை காட்டிலும், சராசரி மதிப்பை காட்டிலும் அதிகமாக உள்ளதால் உறுதி செய்து நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்படைப்பு செய்தமையை மன்றம் ஏற்கலாம்.(ந.க.எண்.1450/2020/அ2)

**மன்றத்தீர்மானஎண் : 14**

முன் அனுமதி பெற்று கடை ஒப்படைப்பு செய்தமையை மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 15**

பவானி நகராட்சியில் 2019-20ஆம் ஆண்டு ரூ.18.27 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.17 அம்மன் லே அவுட் பகிதியில் திடக்கழிவிலிருந்து மறுசுழற்சி பொருட்கள் பிரித்தெடுத்தல் மையம் கட்டும் பணி ஒப்பந்தத்தாரர் M/s. Sree Angalamman Contruction அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கான இறுதி பட்டியலில் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகையிலிருந்து கூடுதல் காப்புத் தொகை (ASD 5%) ரூ.91400/- பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதில் தணிக்கைத் தடை தொகை ரூ.12293/- ஈடு செய்யப்பட்டது போக மீதத் தொகை ரூ.79107/- மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.79107/- ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1240/2016/இ1)

**மன்றத்தீர்மானஎண்** : 15

கூடுதல் காப்பு தொகை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 16**

பவானி நகராட்சியில் 2019-20ஆம் ஆண்டு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேட்டூர் மெயின் ரோடு-அந்தியூர் ரோடு முதல் பொதுப்பணித் துறை அலுவலகம் வரை குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் பணி ஒப்பநத்தாரர் திரு.M.அப்புசாமி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. இப்பணிக்கான இறுதி பட்டியலில் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகையிலிருந்து கூடுதல் காப்புத் தொகை (ASD 5%) ரூ.50000/- பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதில் தணிக்கைத் தடை தொகை ரூ.2500/- ஈடு செய்யப்பட்டது போக மீதத் தொகை ரூ.47500/- மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.47500/- ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.938/2018/இ1)

<u>**மன்றத்தீர்மானஎண்**</u> : 16

கூடுதல் காப்பு தொகை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 17**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13ல் உள்ள பழனிபுரம் 4வது வீதியில் மழைநீர் வடிகால்கள் உள்ளது. அந்த வடிகால் வழியாக செல்லும் மழைநீர் அங்குள்ள சிறுபாலங்களில் நின்று தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதாகவும், அதனால் மழைகாலங்களில் மழைநீர் தேங்கி நின்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகவும், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் பொதுமக்கள் புகார் அளித்துள்ளனர். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள சிறுபாலங்கள் அமைக்கப்பட்டு நீண்ட வருடங்கள் ஆகிவிட்டபடியாலும் சாலையை விட உயரம் குறைவாக உள்ளதாலும் அந்த பாலங்களில் கழிவுநீர் தேங்கி வருகின்றது. எனவே மேற்கண்ட இரண்டு பாலங்கள் அகற்றி புதிதாக சிறுபாலங்கள் 2 எண்ணிக்கை அமைக்க மதிப்பீடு ரூ.1.95 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண். 190/2024/இ1)

<u>**மன்றத்தீர்மானஎண்**</u> : 17

குடிநீர் நிதியிலிருந்து மேற்படி செலவினத்தைமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 18**

பவானி நகராட்சி பொறியியல் பிரிவிற்கு தொழில்நுட்ப உதவியாளர் மற்றும் பணி ஆய்வர் மூன்று மாதத்திற்கு (பிப்ரவரி 2024 முதல் ஏப்ரல் 2024 வரை) ஒப்பந்த அடிப்படையில் ஏற்பாடு செய்தல் பணிக்கு ரூ.2.00 இலட்சத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி நாள்.09.01.2024ன்படி, அனுமதி அளித்துள்ளதின் பேரில் 24.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில்

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிபீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.GSC TECHNOLOGY & SERVICES, KOMARAPALAYAM | மதிப்பீட்டை விட 0.05% சதவீதம் குறைவு |
| 2. | M/s.RK CONTRACTOR, KOMARAPALAYAM | மதிப்பீட்டை விட 0.33% சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05% சதவீதம் குறைவாக அளித்துள்ள "M/s.GSC TECHNOLOGY & SERVICES, KOMARAPALAYAM" அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்.16/2024/இ1)

<u>மன்றத்தீர்மானஎண்</u> : 18

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 19**

பவானி நகராட்சி பொறியியல் பிரிவிற்கு குடிநீர் பராமரிப்பு பணிகளுக்கு நான்கு பணியாளர்களை மூன்று மாதத்திற்கு (பிப்ரவரி 2024 முதல் ஏப்ரல் 2024 வரை) ஒப்பந்த அடிப்படையில் ஏற்பாடு செய்தல் பணிக்கு ரூ.2.25 இலட்சத்திற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி நாள்.09.01.2024ன்படி, அனுமதி அளித்துள்ளதின் பேரில் 24.01.2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கும் கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிபீட்டு விலை விகிதம் |
|---|---|---|
| 1. | M/s.GSC TECHNOLOGY & SERVICES, KOMARAPALAYAM | மதிப்பீட்டை விட 0.19% சதவீதம் குறைவு |

| | | |
|---|---|---|
| 2. | M/s.RK CONTRACTOR, KOMARAPALAYAM | மதிப்பீட்டை விட 0.39% சதவீதம் அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாக மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.19% சதவீதம் குறைவாக அளித்துள்ள “M/s.GSC TECHNOLOGY & SERVICES, KOMARAPALAYAM” அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.(ந.க.எண்.17/2024/இ1)

**மன்றத்தீர்மானஎண்** : 19

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள்** : 20

பவானி நகராட்சியில் 108 எண்ணிக்கை சிறு மின் விசைப்பம்புகள் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டு வார்டு எண்.1 முதல் 13 வரையுள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே மேற்கண்ட சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக பழுது நீக்கம் செய்ய 01.01.2024 முதல் 31.03.2024 வரையிலான மாதங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மோட்டார்கள் அமைக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகி உபயோகப்படுத்த முடியாத மோட்டார்களை மாற்றி புதிய மோட்டார் மற்றும் Starter-கள் பொருத்தவும் மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.189/2024/இ1)

<u>**மன்றத்தீர்மானஎண்**</u> : 20

குடிநீர் நிதியிலிருந்து மேற் கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 21**

பவானி நகராட்சியில் 108 எண்ணிக்கை சிறு மின் விசைப்பம்புகள் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டு வார்டு எண்.14 முதல் 27 வரையுள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு தண்ணீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்படுகிறது. இதனால் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே மேற்கண்ட சிறுமின் விசைப்பம்புகள் மற்றும் நீர் மூழ்கி மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனடியாக பழுது நீக்கம் செய்ய 01.01.2024 முதல் 31.03.2024 வரையிலான மாதங்களுக்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், மோட்டார்கள் அமைக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகி உபயோகப்படுத்த முடியாத மோட்டார்களை மாற்றி புதிய மோட்டார் மற்றும் Starter-கள் பொருத்தவும் மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.189/2024/இ1)

<u>**மன்றத்தீர்மானஎண்**</u> : 21

மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் :22**

பவானி நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தினந்தோறும் 4.5 மெட்ரிக் டன் மக்காத பிளாஸ்டிக் கழிவுகள் தரம் பிரித்து

தூய்மைப் பணியாளர்களால் சேகரிக்கப்படுகிறது. இவற்றில்(அட்டை, தேங்காய் தொட்டி, பிளாஸ்டிக் பொருட்கள் இரும்பு பொருட்கள் போன்றவை) 0.9 மெ.டன் தூய்மைப் பணியாளர்களால் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள 3.6 மெ.டன் பிளாஸ்டிக் கழிவுகளில் ஒளிரும் ஈரோடு பவுண்டேசன் அவர்களால் CSR நிதி வாயிலாக அமைக்கப்பட்ட Incinerator-ல் 1 மெ.டன் வரை எரிக்கப்படுகிறது. மீதமுள்ள 2.5 டன் பிளாஸ்டிக் கழிவுகள் RRC மையத்தில் சேகரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரிப்பதால் பிளாஸ்டிக் கழிவுகளின் அளவுகள் அதிகரித்து சேகரித்து வைப்பதற்கு போதிய இட வசதிகள் ஏதுமில்லை. மேலும் சேகரித்து வைக்கும் பிளாஸ்டிக் கழிவுகளால் தீ விபத்துகள் ஏற்படும் அபாயம் இருக்கிறது. எனவே விற்பனையாகாத பிளாஸ்டிக் கழிவுகள் மாதம் 50 மெ.டன் முதல் 60 மெ.டன் வரை சேகரமாவதால் இதனை அரியலூரில் உள்ள அல்ட்ரா டெக் சிமெண்ட் பேக்டரி மற்றும் டால்மியா சிமெண்ட் பேக்டரிக்கு லாரியில் JCP உதவியுடன் ஏற்றி எரிபொருளுக்கு அனுப்புவதால் Dump Free City என்ற நிலையினை அடையும். எனவே உள்ளூர் லாரி வாடகை, JCP வாடகை, காத்திருப்பு கட்டணம் உட்பட ஒரு லோடு பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பிட செலவினம் ரூ.25,000/- ஆகும். எனவே இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.202/2024/எச்.1)**

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 22

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள்** : 23

பவானி நகராட்சியில் SBM(URBAN) 2.0 திட்டம் 2021-22ன்கீழ் வார்டு எண்.7 திருவள்ளுவர் நகரில் ரூ.24.06 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் கட்ட 16.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய M/s.Parthasarathi

Engineering Constructions அவர்களின் ஒப்பந்தப்புள்ளி ஏற்று 16.06.2022 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பிடத்தில் கூடுதலாக பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதில் Ventilator, Elevation Work, Hand Rails மற்றும் இதரப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.238000/-ற்கு தயார்செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 193/2024/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 23

மேற்படி செலவினத்தைவருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் :24**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8அந்தியூர் ரோடு மற்றும் சோமசுந்தரபுரம் ஆகிய வீதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு பொது உபயோகத்திற்கு போதிய தண்ணீர் வசதி இல்லை. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே அருகில் அமைக்கப்பட்டுள்ள சிறுமின் விசைப்பம்பு மற்றும் HDPE டேங்கிலிருந்து குழாய்கள் நீட்டிப்பு செய்து மேற்கண்ட தெருக்களுக்கு தண்ணீர் வசதி ஏற்படுத்தித் தர மதிப்பீடு ரூ.63,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.205/2024/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 24

மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 25**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பெருமாள்புரம் வீதியில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுக் கிணறு உள்ளது. அந்த கிணற்றில் உள்ள நீரினை

பொதுமக்கள் பொது உபயோகத்திற்கு பயன்படுத்தி வருகின்றனர். அந்த கிணற்றினை சுற்றி உள்ள சுற்றுச்சுவர் தார்சாலையை விட மிகவும் தாழ்வாக உள்ளது. எனவே மேற்கண்ட சுற்றுச்சுவர் உயரப்படுத்தி, கம்பி வலை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.50,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.206/2024/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 25

மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 26**

2023-24ஆம் ஆண்டிற்கு ஈரோடு மாவட்டத்திற்கு சட்டமன்ற குழுக்கள் 1.பொது கணக்கு குழு 2.மதிப்பீட்டுக் குழு 3.அரசு உறுதி மொழிக்குழு வருகை புரிந்து ஆய்வுப் பணிகள் மற்றும் ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது. அக்குழுக்கள் ஈரோடு மாவட்டத்திற்கு வருகை புரிந்த போது அக்குழு உறுப்பினர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் ஏற்படுத்தித் தர ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.22047/2023/அ7, நாள்.17.11.2023, ந.க.எண்.26656/2023/அ7, நாள்.08.01.2024 மற்றும் ந.க.எண்.2146/2024/பஆ1, நாள்.03.02.2024 ஆகிய கடிதங்கள் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சட்டமன்ற குழு உறுப்பினர்களுக்கு தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளுக்கான ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2061/2023/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 26

**மேற்படி செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.**

**மன்ற பொருள் : 27**

பவானி நகராட்சியில் ஒளிரும் ஈரோடு பவுண்டேசன் நிறுவனத்தின் வாயிலாக 1.5 டன் கொள்ளளவு கொண்ட எரியூட்டும் இயந்திரம் அமைக்க TamilNadu Pollution Control Board-ன் நிறுவுதல் அனுமதி பெறப்பட்டு அமைக்கப்பட்டது. எரியூட்டும் இயந்திரம் அமைக்க மாவட்ட சுற்றுச்சூழல் பொறுப்பாளர் அவர்களிடமிருந்து 14.12.2022 அன்று நிறுவுதல் அனுமதி பெறப்பட்ட நிலையில் எரியூட்டும் இயந்திரத்தினை இயக்குவதற்கு தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து இயக்குதல் அனுமதி பெறப்படவேண்டும். தற்பொழுது இயக்குதல் அனுமதிக்கு விண்ணப்பிக்க மாசு கணக்கீட்டு கருவி (Emission Monitoring Device) பொருத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1625/2020/இ1)

<u>மன்றத்தீர்மான எண்</u> : 27

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 28**

பவானி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12ல் மயான வளாகத்தில் உட் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதி 2013-14ன்கீழ் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் எரியூட்டும் தகன மேடை கட்டி முடிக்கப்பட்டு 24.03.2015 முதல் 10 ஆண்டுகளுக்கு பராமரிப்பு செய்திட ரோட்டரி கிளப் ஆப் பவானி – குமாரபாளையம் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எரியூட்டும் தகன மேடையில் இந்நகராட்சியில் பணிபுரிந்து பணியிடை காலமாகும்பணியாளர்களின் உடலினை கட்டணமின்றி தகனம் செய்ய ரோட்டரி கிளப் ஆப் பவானி – குமாரபாளையம் அவர்களிடம் கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1840/2012/இ1)

<u>மன்றத்தீர்மான எண்</u> : 28

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் : 29**

பவானி நகராட்சிப் பகுதிகளில் திறந்தவெளியில் மலம் கழிப்பதை தவிர்க்கும் திட்டம் 2013-14ன்கீழ் கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கு M/s.Urbane Industries Limited, Chennai நிறுவனத்தால் பணி மேற்கொள்ளப்பட்டது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | பிடித்தம் செய்யப்பட்ட ASD 5% தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்.7, திருவள்ளுவர் நகரில் (தாமரைக் குட்டை) நம்ம டாய்லெட் கட்டும் பணி. | 18.00 | 71000/- |
| 2 | வார்டு எண்.18 கல்தொழிலாளர் முதல் வீதியில் நம்ம டாய்லெட் கட்டும் பணி. | 18.00 | 172000/- |
| | மொத்தம் | 36.00 | 243000/- |

மேற்கண்ட பணிகளுக்கான இறுதி பட்டியலில் ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய தொகையிலிருந்து கூடுதல் காப்புத் தொகை (ASD 5%) ரூ.243000/- பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. அதில்தணிக்கைத் தடை தொகை ரூ.18000/- ஈடு செய்யப்பட்டது போக மீதத் தொகை ரூ.225000/- தணிக்கை தடை மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் வரவாக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ.225000/- ஒப்பந்ததாரருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1275/2013/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 29

வைப்புத்தொகை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் :30**

பவானி நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள Raw Water Pumping கட்டிடத்தின் கிணற்றுக்குள் உள்ள Pumping Turbine Motor-ல் புட்வால்வு மற்றும் ஸ்டெய்னரில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. மேற்படி கிணற்றிற்குள் இறங்கி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள பாம்புகள் இடையூராக உள்ளது. எனவே மேற்படி கிணற்றிற்குள் உள்ள பாம்புகளை அகற்றுவதற்கும் Pumping Turbine Motor-ல் உள்ள புட்வால்வு மற்றும் ஸ்டெய்னரில் ஏற்பட்டுள்ள அடைப்புகளை சரிசெய்வதற்கும் ஏற்படும் செலவினம் ரூ.5500/-ஐ நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண். 198/2024/இ1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 30

மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள் :31**

பவானி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையில் கடந்த ஆண்டுகளில் டெங்கு காய்ச்சல் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுசிறப்பாக பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது மார்ச்-2024 முதல் ஆகஸ்ட்-2024 வரையிலான காலத்திற்கு

டெங்கு காய்ச்சல் உருவாக்கும் ஏடிஸ் கொசுக்கள் முட்டையிட்டுஅதிக எண்ணிக்கையில் லார்வாக்கள் உற்பத்தியாகி டெங்கு காய்ச்சல் பரவும் சூழ்நிலை உள்ள இடங்களில் டெங்கு காயச்சல் தடுப்பு பணியாளர்களை நியமனம் செய்ய மாவட்ட பொது சுகாதார மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை அறிவுறுத்தியுள்ளது. எனவே 36 எண்ணிக்கையிலான டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியாளர்களை பகுதி நேரமாக ஆறு மாதங்களுக்கு (180 நாட்கள்)மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்திக் கொள்ளவும் இதற்காகும் உத்தேச செலவு ரூ.30.00/- லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தொற்றுநோய் தடுப்பு பணிகள் மற்றும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம்அனுமதிக்கலாம்.(ந.க.எண்.863/2021/ எச்1)

**<u>மன்றத்தீர்மானஎண்</u>** : 31

அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**மன்ற பொருள்** :32

தமிழ்நாடுநகர்ப்புறஉள்ளாட்சிஅமைப்புகள்விதிகள் 2023-ன்படிநகராட்சிபகுதிகளில்நடைபெறும்வர்த்தகம்மற்றும்வியாபாரங்கள், தொழிற்சாலைகள், தொழிலகம்மற்றும்மற்றநோக்கங்களுக்காகஉரிமம்வழங்கிடஉரிமம்வழங்குவதற்கானநிறுவனங்களின்வகைப்பாட்டினைஅட்டவணை I, II, மற்றும் IIIல்வகைப்படுத்திகுறைந்தபட்சமற்றும்அதிகபட்சகட்டணங்களின்அடிப்படையில்உள்ளாட்சிஅமைப்புகளுக்குதகுந்தார்போல்நிர்ணயம்செய்துஉரிமம்வசூலித்துஉரிமம்வழங்கிடவேண்டியுள்ளது. தமிழ்நாடுநகர்ப்புறஉள்ளாட்சிஅமைப்புவிதிகள் 2023-ல்தொழில்உரிமங்கள்வழங்குவதுகுறித்தவிதிகளில்குறிப்பிடப்பட்டுள்ளநிபந்தனைகள்மற்றும்விதிமுறைகள்மன்றத்தின்பார்வைக்குவைக்கப்படுகிறது.

